# பொருளியல்

## தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் பல்வேறு விலைகள்




The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

## தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் பல்வேறு விலைகள்

பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் மீது விதிக்கப்படும் பல்வேறு வரிகள் மற்றும் வழங்கப்படும் மானியங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையான விலைகளை இனங்காணலாம்.




### அடிப்படை விலை (Basic Price)

உற்பத்தியாளர்கள் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து உற்பத்தி தளத்தில் விற்பனைக்குத் தயாராக வைத்திருக்கும் நிலையில் அறவிடப்படும் விலைகளே அடிப்படை விலைகளாகும். அதாவது உற்பத்தி தளத்தில் கொள்வனவாளரால் உற்பத்தியாளருக்கு செலுத்தப்படும் விலையினைக் குறிக்கின்றது.

இவ்விலை காரணிச் செலவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

- உற்பத்தியாளன் உற்பத்தியின் போது பெற்றுக்கொள்ளும் மானியங்கள் அடிப்படை விலையில் உள்ளடக்கப்படுகின்றது.

  **உதாரணம்** :- உரமானியம்

- உற்பத்தி பொருள் மீது விதிக்கப்படும் எந்தவொரு வரிகளும் அடிப்படை விலையில் உள்ளடக்கப்படமாட்டாது. ஆனால் உற்பத்தி செயன்முறை மீது விதிக்கப்படும் வேறு வரிகள் அடிப்படை விலையில் உள்ளடக்கப்படுகின்றது.

**உற்பத்தி வரி (TAX)**

**உற்பத்தி பொருள் மீதான வரிகள்**

1. விற்பனை வரி

**உற்பத்தி செயன்முறை மீதான வேறு வரிகள்**

1. நிலம், கட்டிடம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரி
2. அனுமதி பத்திரக் கட்டணம்
3. முத்திரைக் கட்டணம்
4. சூழல் மாசடைதல் வரி
5. வாகனங்களுக்கு அறவிடப்படும் வரி



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்தி மானியங்கள் (SUBSIDIES)

**உற்பத்தி பொருள் மீதான மானியம்**

**உதாரணம்**

1. தேயிலை, தேங்காய், இறப்பர் ஆகிய பயிர்களுக்கு வழங்கப்படும் மானியம்

**உற்பத்தி செயன்முறை மீதான மானியம்**

**உதாரணம்**

1. நிறுவனத்தின் ஊழியர் தொகை மீது வழங்கப்படும் மானியம்
2. வேலை வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் முகமாக வழங்கப்படும் மானியம்
3. உடலியல் ரீதியா குறைப்பாடு உடையவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதை ஊக்குவிக்கும் முகமாக வழங்கப்படும் மானியங்கள்

**அடிப்படை விலை = உற்பத்தியாளன் விலை - உற்பத்தி மீது விதிக்கப்படும் தேறிய வரிகள்**

**உற்பத்தி மீதான தேறிய வரி = உற்பத்தி மீது விதிக்கப்படும் வரிகள் - உற்பத்தி மீது வழங்கப்படும் மானியங்கள்**

**அடிப்படை விலைகள் = காரணிச் செலவு + உற்பத்தி செயன்முறை மீதான வரிகள் - உற்பத்தி செயன்முறை மீதான மானியம்**

**Basic Price = Factor Cost + Production Cost - Production Subsidies**

**Note**

காரணிச் செலவிற்குள் எந்தவொரு வரிகளும் உள்ளடக்கப்படுவதில்லை

## உற்பத்தியாளார் விலை (Producers' Price)

உற்பத்தி செய்யப்படும் இடத்தில் இருந்து விற்பனையாளரை / வியாபாரியை நோக்கி பொருட்கள் செல்லும் போது உற்பத்தியாளரால் அறவிடப்படும் விலை உற்பத்தியாளர் விலையாகும். அதாவது உற்பத்தியின் மீது நேரடியாக அறவிடப்படும் வரிகள் அடிப்படை விலைகளுடன் கூட்டப்பட்டு உற்பத்தியின் மீது வழங்கப்படும் மானியங்கள் கழிக்கப்படுவதன் மூலம் உற்பத்தியாளர் விலை கணிக்கப்படுகின்றது

**உற்பத்தியாளார் விலை = அடிப்படை விலை + உற்பத்தி வரி - உற்பத்தி மானியம்**



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கொள்வனவாளார் விலை (Purchasers' Price)

நுகர்வோர் உண்மையாகவே பொருட்கள் சேவைகளுக்குக் கொடுக்கும் விலை கொள்வனவாளர் விலையாகும். உற்பத்தியாளர் விலைக்கு மேலதிகமாக போக்குவரத்து கட்டணம், இடைத்தரகர்கள் மற்றும் நுகர்வோர் மூலம் செலுத்தப்பட வேண்டிய தேறிய வரி என்பவற்றை உள்ளடக்கி கொள்வனவாளர் விலை கணிக்கப்படுகின்றது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவாளர் விலை | = | உற்பத்தியாளர் விலை | + | இடைத்தரகர்களால் அறவிடப்படும் வர்த்தகத் தீர்வைகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் | - | அரசின் நுகர்வோர் மானியம் | + | நுகர்வோர் மீதான வரிகள் |

## சந்தை விலை (Market Price)

புதிய கணிப்பீட்டு முறையின் படி மொத்த உள்நாட்டு உற்பத்தியானது சந்தை விலையில் மட்டுமே கணிப்பிடப்படுகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (சந்தை விலையில்) | = | மொத்த கூட்டிய பெறுமதி (அடிப்படை விலை) | + | சகல உற்பத்திகள் (இறக்குமதி உள்ளிட்ட தேறிய வரிகள்) |

$$GDP_{mp} = \sum GVA_{BP} + Nt$$

**அல்லது**


| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (சந்தை விலையில்) | = | மொத்த கூட்டிய பெறுமதி (உற்பத்தியாளர் விலை) | + | இறக்குமதி மீதான தேறிய வரிகள் |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்தி எல்லை

தேசிய கணக்கீட்டிற்குள் உள்ளடங்கும் பொருளாதார நடவடிக்கைகளை உற்பத்தி எல்லை விளக்குகின்றது. இங்கு பொருளாதார நடவடிக்கை என்பது குறித்த நடவடிக்கைக்குப் பொறுப்பாகவும் அதன் மூலம் மேற்கொள்ளப்படும் வெளியீட்டிற்கு உரிமை கோரும் நிறுவன அலகொன்று அவசியம்




### உற்பத்தி எல்லைக்குள் இடம்பெறும் விடயங்கள்

1. சந்தையில் விற்பனையாகும் அனைத்துப் பொருட்களும் சேவைகளும்
2. உற்பத்தி செய்த நிறுவனம் தவிர்ந்த ஏனைய நிறுவன அலகுகளுக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும்
3. தங்களுடைய இறுதி நுகர்வுக்காகவோ மூலதனத் திரட்டல்களுக்காகவோ உற்பத்தி செய்து அதன் உற்பத்தியாளன் மூலம் தமக்காக வைத்துக்கொண்ட அனைத்துப் பொருட்களும்
4. தம்மிடமுள்ள தாம் குடியிருக்கும் வீடுகளினால் பெறப்படும் வதிவிட சேவைகள்
5. சம்பளம் பெறும் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படும் குடும்ப வேலைகளும் தனிப்பட்ட சேவைகளும்
6. தங்களுடைய நுகர்வு கருதி விவசாய உற்பத்திகள் அவற்றை சேமித்து வைத்தல், காடுகள் மூலம் உணவு பெற்றுக் கொள்ளல், பழங்கள் பெற்றுக் கொள்ளுதல், வேட்டையாடுதல் மற்றும் மீன் பிடித்தல்
7. விவசாய உற்பத்திகளைத் தயாரித்தல், நெல் இடித்து அரிசி ஆக்குதல், அரிசி இடித்து மாவாக்குதல், இறைச்சி, மீன் பதப்படுத்தல், பழங்களைப் போத்தலில் அடைத்தல், பன்னுறைகள், பாய் இழைத்தல் ஆகியன
8. துணி நெய்தல், உடைகள் தைத்தல், பின்னப்பட்ட ஆடைகள், தொப்பி மற்றும் வீட்டுப் பொருட்கள் செய்தல்
9. நீர் பெற்றுக் கொள்ளுதல், சிறு ஓடைகள், நீர் வீழ்ச்சிகள் மூலம் நீர் பெற்றுக் கொள்வதற்காக சிறிய செயற்றிட்டங்களைத் தயாரித்தல்
10. மீன் பண்ணையொன்றில் வளர்க்கப்படும் மீன்கள்

**தொகுப்பு** : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்தி எல்லைக்குள் உள்ளடக்கப்படாத விடயங்கள்

1. வீட்டு உறுப்பினர்களுக்கு உணவு சமைத்தல்
2. குழந்தை பராமரித்தல்
3. வீட்டில் வலது குறைந்தோரையும் முதியவர்களையும் பராமரித்தல்
4. வீட்டை அழகுபடுத்தலும் சுத்தம் செய்தலும்
5. திறந்த நீர்த்தேக்கமொன்றில் இடம்பெறும் மீன் உற்பத்தி


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நிறுவன அலகுகள்

சொத்துக்களை உரிமை கொள்வது பொறுப்புக்களை ஏற்றல், பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் ஏனைய நிறுவன அலகுடன் தொடர்புகளைப் பேணும் பொருளாதார அலகினை நிறுவன அலகுகள் என்பர். நிறுவன அலகுகள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1. நிதி நிறுவனமல்லாக் கூட்டுத்தாபனங்கள் (NFC)

சந்தையை இலக்காக் கொண்டு பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் ஈடுபடும் தனியார் மற்றும் அரச துறை நிறுவனங்கள் இதற்குள் உள்ளடங்கும்

2. நிதிக் கூட்டுத்தாபனங்கள் (FC)

சந்தையை இலக்காக் கொண்டு நிதிச்சேவைகளை வழங்கும் அரச தனியார் நிறுவனங்கள் இதற்குள் அடங்கும்

3. அரசாங்கத் துறை (GG)

சமூக நலன் சமூக நீதி என்பவற்றை இலக்காகக் கொண்டு செயற்படும் அரசாங்க நிறுவனத்தை இது உள்ளடங்கும்

4. வீட்டுத்துறைக்கு சேவை வழங்கும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPISH)

சந்தை விலையை விடக் குறைவாக/ இலவசமாக வீட்டுத் துறையினருக்கு சேவையை வழங்கும் தொண்டு நிறுவனங்கள், புண்ணிய நிறுவங்கள், சமய நிறுவங்கள், அரசியற் கட்சிகள், தொழிற் சங்கங்கள் போன்றவை இதற்குள் அடங்கும்

5. வீட்டுத்துறை (குடும்ப அலகுகள்) (HH)

சுய நுகர்வின் பொருட்டு பண்ட உற்பத்தியில் ஈடுபடும் குடும்ப அலகுகளையும் சந்தை நோக்கிய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் குடும்ப அலகினரையும் இத்துறை உள்ளடக்குகின்றது.

இத்துறைக்குள் நுகர்வோர் உற்பத்தியாளர் ஆகிய இருசாராரும் உள்ளடங்குவார்

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இலங்கை மத்திய வங்கி நிறுவன ரீதியாக அலகுகளை பின்வருமாறு நான்காக வகைப்படுத்தியுள்ளது

**NFC**

நிதிசாரா கூட்டுத்தாபனங்கள்

Non Financial Corporation

**FC**

நிதிசார் கூட்டுத்தாபனங்கள்

Financial Corporation

**GG**

பொது அரசாங்கம்

General Government

**HH & NPISH**

வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்கு பணிபுரியும் இலாபம் ஈட்டாத நிறுவனங்கள்

House Hold and Non Profit Institution Serving House hold

**தொகுப்பு** : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மொத்த உள்நாட்டு உற்பத்தி

ஒருநாடு குறித்த ஒரு வருடத்தில் தனது பொருளாதார பரப்புக்குள் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் சேவைகளின் பணரீதியான சந்தைப் பெறுமதி மெத்த உள்நாட்டு உற்பத்தியாகும்

மொத்த உள்நாட்டு உற்பத்தி = அடிப்படை விலைகளில் மொத்த கூட்டிய பெறுமதி + உற்பத்தி பொருள் மீதான வரி - உற்பத்தி பொருள் மீதான மானியம்

| பொருளாதார நடவடிக்கை | மில்லியனில் பொறுமதி |
|---|---|
| 1. வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி | 641943 |
| 1. வேளாண்மை மற்றும் காடகக்கல் | 523294 |
| 2. மீன்பிடித் தொழில் | 118649 |
| 2. கைத்தொழில் | 2416276 |
| 1. சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும் | 218545 |
| 2. தயாரிப்பு | 1383461 |
| 3. மின்வலு எரிவாயு நீர் மற்றும் கழிவு கையாளல் | 130665 |
| 4. கட்டடவாக்கம் | 683604 |
| 3. பணிகள் | 5087452 |
| 1. மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், குடியிருப்பு மற்றும் உணவுப்பணிகள் | 2064738 |
| 2. தகவல் மற்றும் தொடர்பாடல் | 52802 |
| 3. நிதியியல் மற்றும் காப்புறுதி, இரட்டை வதிவுரிமை உள்ளடங்களான உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 1152781 |
| 4. தொழில் தகைமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கை | 1030603 |
| 5. பொது நிர்வாகம் பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 786529 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டல் | 8145671 |
| மானியங்கள் நீங்கலான உற்பத்தி மீதான வரி | 866355 |
| சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 9012026 |

மூலம் : மத்தியவங்கி ஆண்டறிக்கை - 2016

**தொகுப்பு** : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பிடும் போது பயன்படுத்தப்படும் மாதிரிகள்

**மாதிரிகள்**

1. கைத்தொழில் அடிப்படையிலான வகைப்பாடு
2. நிறுவனத்துறை அடிப்படையிலான வகைப்பாடு

### மொத்த தேசிய வருமானம் (Gross National Income)

ஒருநாடு குறித்த ஒரு வருடத்தில் தனக்குச் சொந்தமான காரணிகளைப் பயன்படுத்தி (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் சந்தைப்பெறுமதி மொத்த தேசிய வருமானம் என்பர்.

மொத்த தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + வெளிநாட்டில் இருந்தான தேறிய முதன்மை வருமானம்

வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மைவருமானம் = வெளிநாட்டிலிருந்தான முதன்மை வருமானப் பெறுகை - வெளிநாட்டுக்கான முதன்மை வருமான கொடுப்பனவு

வெளிநாட்டுக் காரணிச் சேவையுடன் தொடர்புடைய ஊழியர் இழப்பீடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டு வருமானம் (வட்டி, இலாபம், பங்கிலாபம்) என்பவற்றை வெளிநாட்டு முதன்மை வருமானம் என்பது குறிக்கின்றது.

**தொகுப்பு** : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தேறிய உள்நாட்டு உற்பத்தி

தேறிய உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி - நிலையான மூலதன நுகர்வு(பெறுமானத் தேய்வு)

## தேறிய தேசிய வருமானம்

தேறிய தேசிய வருமானம் = மொத்த தேசிய வருமானம் - நிலையான மூலதன நுகர்வு

## தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி

$$\text{தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி} = \frac{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}}$$

**நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி**

குறிப்பிட்ட காலத்தினுள் உற்பத்தியாக்கிய பொருட்கள் சேவைகளின் பெறுமதியை அந்த வருடத்தில் காப்படும் விலையில் கணிப்பிடுதல் நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி எனப்படும்.

$$\text{நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி} = \frac{\text{நிலையான விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{100} \times \text{மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி}$$


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**நிலையான விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி**

குறிப்பிட்ட காலத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பெறுமதியை ஒரு ஆண்டின் விலையைப் பயன்படுத்தி கணிப்பிடுதல் நிலையான விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

$$\text{நிலையான விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி} = \frac{\text{நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி}} \times 100$$

**மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி**

குறிப்பிட்ட ஆண்டின் நடைமுறை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் நிலையான விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதத் தொடர்பினை மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி குறிக்கின்றது.

$$\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி} = \frac{\text{நடைமுறை விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{நிலையான விலை உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

**பொருளாதார வளர்ச்சி வீதம்**

இரு காலப்பகுதிகளுக்கிடையில் நிலையான விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் நூற்று வீதம் பொருளாதார வளர்ச்சி வீதம் எனப்படும்

$$\text{பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{\text{நடப்பு வருடத்தின் நிலையான விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி} - \text{முன்னைய வருடத்தின் நிலையான விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{முன்னைய வருடத்தின் நிலையான விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

**தொகுப்பு** : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk